# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Case No.CC.110/2022

| Deposition of Name | அசோக்குமார் | Prosecution | LW-9 as PW-7 |
|---|---|---|---|
| Father Name | புகழேந்தி | Defence | |
| Station | குத்தாலம் PS | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 43/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**22.07.2025 எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது குத்தாலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வழக்கு சமயத்தில் சீர்காழி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது சீர்காழி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் அர்சுனன் என்பவர் தற்போது உயிருடன் இல்லை இந்த வழக்கில் நான் அவருக்காகவும் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 12.03.2022 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொருப்பில் இருந்த போது சீர்காழி அரசு மருத்துவ மனையில்இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த சிவபாதசேகர் மகள் ஐஸ்வர்யா என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று சீர்காழி காவல் நிலைய குற்ற எண் 114/2022 இதச பிரிவு 294b, 324, 506(ii) இதவின் கீழ் வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார் அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 8.30 மணிக்கு சாட்சிகள் சிவசங்கர் மற்றும் சிவராஜீலு சம்பவ இடம் சென்று, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலம் பதிவு

செய்தேன். எதிரியை தேடி வந்த நிலையில் அன்றைய தினமே 10.30 மணிக்கு செம்மங்குடி பஸ் நிறுத்தம் அருகில் நின்று கொண்டு இருந்து எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். காயம் பட்டவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கார்த்திகேயன் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் அர்சுனன் அவர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 11.05.2022 ம் தேதி இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294b, 324, 506(ii) கீழ் இந்நீதிமன்றத்தில் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை:**

**1.** இந்த வழக்கில் சம்பவம் நடந்தது 11.03.2022 என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையும், புகார் கிடைத்ததும் 12.03.2022 ஒரு நாள் காலதாமதம் என்றால் சரிதான். கால தாமதம் குறித்து முதல் தகவல் கால தாமதத்திற்கு காரணம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியும் புகார்தாரரும் உறவினர்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1–6 ஆகிய நபர்கள் கூட உறவு தான் என்றால் தவறு. அவர்கள் வெறும் ஊர்க்காரர்கள் தான். இவ்வழக்கின் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அகோரமூர்த்தி, குழந்தைவேல் ஆகியோரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் அனைவரும் சம்பவ இடத்திற்கு பக்கத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் அவர்களுடைய வீடுகள் வரைபடத்தில் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி ஐஸ்வர்யாவின் வீடு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. வாதியின் வீடு அதுவல்ல என்றாலும் அது அவருடைய பாட்டியின் வீடு என்றாலும் சரியல்ல.

2.புகார்தாரரின் பாட்டியும் எதிரியும் தாய் மகன் உறவு என்றால் சரிதான். மேற்படி இருவருக்கும் இடையே 20 வருடங்களுக்கும் மேலாக பேச்சுவார்த்தை இல்லை என்று என் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் தவறு. புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை என்று தான் நான் சொல்லியுள்ளேன். மேற்படி பாட்டிக்கு சம்பவம் பற்றி தெரியும் என நான் சொல்லியுள்ளது தவறு என்றாலும் அந்த நபரை நீதிமன்றத்திற்கு வந்து தனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்பதை

ஒப்புக்கொண்டுள்ளார் என்றாலும் சரியல்ல.

3.அதேபோல சாட்சிகள் தரமணி, சிவசங்கர், சிவராஜகுரு ஆகியோர் சம்பவம் பற்றி தனக்கு தெரியாது என சொல்லி உள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்ததால் தான் சாட்சிகள் நீதிமன்றத்தில் பிறழ் சாட்சிகள் ஆகியுள்ளார்கள் என்றால் சரியல்ல. மருத்துவர் தனது விசாரணையில் 2 நபர்கள் புகார்தாரரை தாக்கியதாக சொன்னதாக தான் பதிவு செய்துள்ளார் என்றால் விபத்து பதிவேட்டில் அப்படித்தான் உள்ளது. ஆனால் நாங்கள் அவர் எங்களிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளோம்.

4. எதிரி தாக்கியதாக சொல்லப்படும் கட்டை எதையும் நான் கைப்பற்ற வில்லை என்றால் சரிதான். சம்பவ நாளன்று புகார்தாரர் தரப்பினர்தான் தன்னை தாக்கியதாக எதிரி புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அந்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு எதிரி மனு செய்து இருந்தார் என்றால் சரியல்ல. எதிரி அவ்வாறு மேல் முறையீடு செய்து அதன் பேரில் அந்த புகாரை விசாரிக்க சொல்லி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இடம் இருந்து உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் அதனை விசாரிக்கவில்லை. அந்த மனு பற்றி நான் எதுவும் தெரிந்து கொள்ள வில்லை என்றால் சரிதான்.

5. சம்பவம் நடந்த அன்று புகார்தாரர் மற்றும் அவரது தகப்பனார் மற்றும் உறவினர்கள் ஆகிய அனைவரும் சேர்ந்து எதிரியை தாக்கினார்கள் என்றால் சரியல்ல அன்றைய தினம் புகார்தாரரிடம் எதிரியை தாக்கும் போது புகார் தாரர் சட்டேன்று குறுக்கே வந்து அவரும் எதிரியை தாக்கும் போது புகார்தாரருக்கு மண்டையில் புகார்தாரர் தகப்பனாரே தாக்கிவிட்டார். ஆனால் வழக்கிற்காக தாங்கள் எதிரி மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பல முறை புகார் தாரர் மற்றும் அவரது உறவினர்கள் எதிரி தாக்கப்பட்டு அவர்களின் வீடுகளும் உடைக்கப்பட்டு தங்கள் காவல்நிலையத்திலும் உயர் அதிகாரிகளிடமும் புகார் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் மற்ற சாட்சிகள் சம்பவம் பற்றி தெரியாது என்று கூறியுள்ளார்கள் என்றாலும்

உண்மையில் இந்த சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எதிரி மீது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது**